# மில்க்வைற் செய்தி


# Milk White News

தபாற்பெட்டி இல. 77, யாழ்ப்பாணம். தொலைபேசி: 23233

கௌரவ ஆசிரியர்: திரு. க. சி. குலரத்தினம் ★ ஆடி 1986 ★ இதழ் 127


## மூலப் பொருள்வளம்

மூலப் பொருள்வளமில்லாமல் உற்பத்திப் பெருக்கம் உண்டாவதில்லை. எந்த உற்பத்திப் பொருளுக்கும் மூலப்பொருள் இன்றியமையாதது. சில மூலப் பொருள்கள் உற்பத்திப் பொருள்களை உண்டாக்கும்போது உப விளைவுகளான வேறு உற்பத்திப் பொருள்களையும் தரும். எங்கள் பிரதேசத்தில் எள் நன்றாக விளையும். எள் எண்ணெய் நல்ல எண்ணெய். அதை நல்லெண்ணெய் என்றே வழங்குவர். எண்ணெய் என்றால் எள்ளில் இருந்து வந்தது என்பதே பொருள். எள் எல்லோராலும் விளைவுசெய்யக்கூடிய தானியம். அது தானியம் என வகுக்கப்படாவிட்டாலும் நவதானியத்தில் இடம் பெறுகிறது. அதன் அருமையும் பயனும் நோக்கியாகலாம். எள் நல்ல உணவு. எள், எள்ளுப்பாகு பழைய உணவு. கடற்பிரயாணிகள் கொண்டு சென்று உண்டு உடலுரம் பெற்று உழைத்து மீள்வர். எண்ணெய் குழந்தைகளை வளர்க்கும் சஞ்சீவி. வயலுள்ளவர்கள் வசதிபோல எள் விதைத்து விளைவைப் பெருக்கலாம்தானே.



மில்க்வைற் செய்தி – பண்டிதமணி சிறப்பிதழ்ப் பிரதியை முதலிற்பெற்று, ஆவலுடன் பண்டிதமணி அவர்களின் முதுமைத் தவக்கோலத்து முகப்புப் படத்தை முகமலர்ச்சியோடு பார்த்து மூழ்கிநிற்கும் யாழ்ப்பாணக் கல்விப் பணிப்பாளர் உயர்திரு இரா. சுந்தரலிங்கம் அவர்கள். இருபுறமும் மில்க்வைற் தொழிலதிபரும், செய்தி ஆசிரியரும் நிற்கிறார்கள்.

மத ஒழுங்கின்படி நடப்பவரே நல்ல குருக்கள்

உ
சிவமயம்



## கடவுள் வணக்கம்

### சுந்தரமூர்த்தி நாயனர் தேவாரம்
திருவெதிர்கொள்பாடி
பண் - இந்தளம்

வாழ்வர் கண்டீர் நம்முள் ஐவர்
வஞ்ச மனத்தீரே
யாவ ராலு மிகழப் பட்டிங்
கல்லல் வீழாதே
மூவ ராயும் இருவ ராயும்
முதல்வ னவனேயாம்
தேவர் கோயில் எதிர்கொள் பாடி
யென்ப தடை வோமே.

வஞ்சனையையுடைய நெஞ்சமுள்ளவரே, எமக்கு உட்பகைவராயே ஐவர் வாழ்கின்ருர்கள். அதனுல் அவர்களின் தீமையாலே யாவராலும் இகழப்படும் நிலையை எய்தித் துன்பத்தில் விழாது, தாமே சுத்தமாயையில் மும்மூர்த்திகளாயும், பிரகிருதி மாயையில் தமது ஆணைவழி பிரமன் திருமால் என்னும் இருவராயும் எவ்வாற்ருனும் எல்லாவுலகிற்கும் எல்லாவுலகத்தவர்க்கும் அவரே முழு முதற் பெருமானுய் எழுந்தருளியுள்ள திரு எதிர்கொள் பாடி என்னும் திருக்கோயிலுக்குச் செல்வோம் வாரீர்.

### மலிவான அரிசி

முப்பதாண்டுகளுக்கு முன்பின்னுக முப்பத்தைந்து சதத்துக்கு ஒரு கொத்து அரிசி. அதுவும், மில்சாட், எகிப்திய, ஸ்பானிய, சீன இனம். இவை 5,50,000 தொன் இறக்குமதியானவை. பத்துக்கோடி ரூபாவைக் கொண்டு போனவை.




## ஒற்ருடல்

பிறர்பால் நிகழ்வனவற்றை மறைவாக அறிந்து அரசரிடம் கூறுதல். (பழைய ஒற்றுடல் வேறு இன்றைய முறையில் காட்டிக்கொடுக்கும் கயமை வேறு. காக்கை வன்னியன் வேறு ஒற்றர் வேறு. நாட்டின் நன்மைவேறு, நாட்டின் நாசம் வேறு.)

**வினைசெய்வார் தஞ்சுற்றம் வேண்டாதார் என்றுங்கு அனைவரையும் ஆராய்வது ஒற்று.**

அரசனது காரியஞ் செய்வான், சுற்றத்தார், பகைவர் என்று சொல்லப்பட்ட அனைவரையும் ஆராய்பவன் ஒற்றனுவான்.

**Espionage (Spying)**

He who watches all, the king's personal servants, his relatives and his enemies (without any feeling of regard or indifference) is a spy.

### ஆசைமுகம் மறந்துபோச்சே ஆரிடம் சொல்வோமடி தோழி

நந்தி, மீன், பிறை வரைந்தவண்ணமும்,
சேது எழுதிய செந்தமிழும்
முந்திய காலத்து மூத்த குடியினர்
மூதாதையர் காலம் முதல்கண்டனராம்
எங்கிருந்தோ வந்த பறங்கியர் ஒல்லாந்தர்
இவற்றை யெல்லாம் அழித்தனர் அம்மானே.

### பறவைகள் எங்கே பறந்தோடிப் போயின?

இலங்கையில் நூற்றேழு விதமான பறவைகள் பறந்த காலம் பறந்தோடிப் போயிற்று. பிறநாட்டுப் பறவைகள் பருவகாலந்தோறும் பறந்துவரக் காணேம்.

ஊர்ப் பறவைகள், காட்டுப் பறவைகள் பலவித மானவை, பலவித வண்ணத்தவை. காட்டுக்கோழி கௌதாரி, சம்புக்கோழி, அண்டங்காகம் என்னும் காட்டுக் காகம், குக்குறுப்பாச்சி, பேய்க்குயில், கொண்டைக்குயில் மீன்கொத்தி, சாவற்குருவி, காணுன்காலி, பாம்புக்குருவி, காட்டுப் புளினி, கூட்டப் புளினி, மாடப்போறு, கோட்டான், கடற்குருவி, ஆள்காட்டி, மலைக்கோட்டான், பொன் குருவி.

★ பொறுமைக்குணம் பொருளை அழிக்கும் ★

## அழகெல்லாம் அழிந்தன ஆருக்குச் சொல்லுவோம்

ஒல்லாந்தர் கட்டிய கோட்டையும், தேவாலயமும் வெள்ளைக்காரர் கட்டிய மணிக்கோபுரமும் ஒரு காலத்தில் வடக்கில் அழகு தந்தவை.

அவை மூன்றும் உருக்குலையாமல் நிலவிய வேளையில் புதிதாக உண்டான அழகமைப்புக்கள் வடக்கை மலரச் செய்தன. அவை யாவையோவெனில் கூறுதும்.

புதிய அகன்ற தெருக்கள், இருவழிப்பாதைகள், ஒரு வழிப்பாதைகள், வீதிகள் தோறும் நிழல்கள் தரும் மரங்கள், புதிய அமைப்பில் மாடமாளிகைகள், அமெரிக்கா அமைப்பில் அழகான வீடுகள், புதிய உயர்தர அங்காடிக் கட்டடங்கள் திறந்தவெளி அரங்கு, மூன்றுமாடி நூலகம், குழாய்வழி நீர்விநியோகம், தீவுப்பகுதிகளை இணைக்கும் நீர்வழித்தெருக்கள், கரையூர்ப் பகுதியில் கவின்பெறு வீட்டுவரிசைகள், புதிய பஸ்வண்டி நிலையம், புதிய புகையிரதநிலையம் பல்வேறு வங்கிகள் தொழில்நுட்பக் கல்லூரி, பல்கலைக்கழக வளாகம் நவீன விடுதிச்சாலைகள் வர்த்தகப் பெருமன்றங்கள் ஐக்கியவியாபாரநிலையம் அழகிய பூங்கா, அமைதியானமுற்றவெளி, அமைதியானகடற்கரை, கைத்தறிநிலையங்கள், மின்தறிநிலையங்கள், சாந்தியளிக்கும் சாந்நித்தியம் மலர்ந்த திருக்கோயில்கள் பல்வேறு விழாக்கள் அமைதிகொடுத்த கலைப்பெருமன்றங்கள் வருவாய் கொடுத்த திராட்சைத் தோட்டங்கள். பட்டி நிறைந்த பசுக்கள், அச்சமின்றிப் படித்த கல்விநிலையங்கள் எல்லாம் உருக்குலைந்தன. உதவாமலும் போயின.

### தமிழர் எதிர்பார்த்தவை அவர்களுக்குக் கிடைத்தவை


நாற்பதாண்டுகளுக்கு முன் 1946 ஆம் ஆண்டில் தமிழர் பராளுமன்றத்தில் 27 ஆசனங்கள் கிடைக்குமென எதிர்பார்த்து 1947 இல் பெற்றவை 20, பின்னர் 1952இல் 13, அதன் பின் 1956இல் 12

### ஜனநாயகம்

நீதி, சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் என்னும் நான்கு தூண்கள் மேலே கட்டப்பெற்ற கொட்டில் ஜனநாயகம். இதைவிட மேலான அரசாங்க அமைப்பை எவரும் கண்டுபிடிக்கவில்லை.

### நீதி

அந்தநீதியைக் கண்டுபிடிக்கப் பிரமாவாலும் திருமாலாலும் முடியவில்லை. பண்டுமால் அயன் அறியா நீதியே என்றார். அந்தநீதி சிவபெருமான். இன்றைய நீதி சமூக நீதி, பொருளாதாரநீதி, அரசியல் நீதி என்பனவாகும். இவற்றை வழங்கி, சிந்தனை, பேச்சு, கொள்கை, மதம் ஆகியவற்றில் சுதந்திரம், அந்தஸ்துவாய்ப்பு, சமத்துவம் வழங்கவேண்டும். நானே அரசு என்று மார்தட்டிய பதினான்காம் லூயி எங்கே?



## இமயசோதி

இமயமலையினடிவாரத்தில் கங்கைநதியின் புனித பிரவாகச் சூழலில் செந்தண்மை பூண்ட சிந்தனையாளர் உலகமக்களுக்காகத் தவஞ்செய்து பெற்ற ஞானத்தை எல்லோருக்கும் விருந்து செய்த கொடை வளத்தால் எங்கும் தெய்விக, திவ்வியசீவனம் உதயமாகி ஒளி காலுகின்றது. அந்த ஒளியை எப்போதும் நினைத்து அவர் காட்டிய வழியில் நடந்து பார்ப்போம். அவர் பூர்வாசிரமத்தில் புகழ்பெற்ற ஆங்கில சித்த அற்புதவைத்தியர். துறவுநிலையில் உயிர்க்குத்தக்க மருத்துவப் பேராசான். ஆத்மீக குருநாதன். அவர்களுடைய நூற்றாண்டு - அஃதாவது நூறும் ஜனனநாள் – ஜயந்தி இவ்வருடம் கொண்டாடப் பெறுகிறது.

## பிரான்சிய தேசீயதினம்

ஐரோப்பிய நாடுகளில் ஒருகாலத்தில் முன்னணியில் நிலவிய பெரியநாடு பிரான்ஸ். அதன் தலைநகரம் பாரிஸ். பாரிஸ் உலகநாகரிக நகரம். பிரான்ஸ்சை ஆண்ட லூயி மன்னர்கள் பலர். ஏழைகள் பட்டபாட்டை விக்ரர் ஹியூகோ எழுதியுள்ளார். போதகர்கள், பிரபுக்கள், பொதுமக்கள் என மூவர்ணத்தாருள் பொதுமக்கள் உழைக்க மற்றவர்கள் ஏப்பம் விட்டனர். பொதுமக்கள் யாவர் எனக் கிளர்ச்சியாளர் கேட்டு விடையும் எழுதினர். பொதுமக்கள் என்பவர் எல்லாமானவர்கள். அஃதாவது வைத்தியர், சட்டத்தரணிகள், ஆசிரியர்கள், உழவர்கள், வர்த்தகர்கள், ஓவியர்கள் என வாழ்ந்த எல்லோரும் பொதுமக்களே. இவர்கள் இதுகாறும் அரசியலில் என்ன பங்களிப்புச் செய்தார்கள் உரிமை பெற்றார்கள்? ஒன்றுமே இல்லை. அப்படியானால் இவர்கள் இப்போது என்ன கேட்கிறார்கள்? ஏதாவது.

இவ்வாறெல்லாம் கேட்டவர் வார்த்தைகளைச் சுருக்கிச் சொன்னால் எல்லாமானவர்கள், ஒன்றுமே பெறாதவர்கள், ஏதாவது கேட்கிறார்கள். Everything, Nothing, Something. இவ்வாறாகப் பசிதாங்க முடியாத பொதுமக்கள் கூட்டம் பஸ்ரையில் என்னும் பெரிய சிறைக்கூடத்தை 1789- 7- 14 ஆம்நாளில் தாக்கி உரிமைகோரி யுத்தஞ்செய்து பெறமுனைந்தார்கள்.

★ நல்ல பிள்ளைகளால் பெற்றோருக்குப் பெருமை ★



# கடவுட் பணி

கடவுளுக்குத் தொண்டு செய்யவேண்டிய குருவானவர் தம்பணியை விடுத்து மன்னர் பணியை மேற்கொண்டு பதவியுயர்ந்து நுனிக்கொம்பர் ஏறி, மன்னரின் வெறுப்புக்கு ஆளாகி, நாடு நகரம் நீங்கிக் கிராமம் ஒன்றில் தஞ்சமடைந்து சொன்னார்.

"நான் மன்னருக்கு மனப்பூர்வமாகப்பணி புரிந்த வகையில் கடவுட்பணி புரிந்திருந்தால் கடவுள் என்னை இந்நிலையில் கைவிட்டிருக்கமாட்டார்." இவ்வாறு கூறியவர் மனத்தாக்கமும் உடல் வருத்தமும் காரணமாக உயிர் துறந்தார். இது பதினாறும் நூற்றாண்டின் ஆரம்ப காலத்தில் இங்கிலாந்தில் நடைபெற்றது.

ஆயிரத்துக்கும் அதிகமான ஆண்டுகளுக்கு முன் தென் பாண்டிநாட்டில் பெரிய மந்திரியாராயிருந்த ஒருவர், அரசபணி மேற்சென்று கடவுட்பணி புரிந்து மன்னரால் தண்டிக்கப்பெற்ற வேளையில், தொண்டரின் பக்குவமுணர்ந்த மன்னன் மன்னிப்புக்கோரி, தொண்டரையே மன்னனாக முடிசூடியிருக்குமாறும் தான் குற்றேவல் செய்வதாகவும் இரந்து கேட்பவும் மறுத்த தொண்டரே மாணிக்கவாசகசுவாமிகள்.

## எட்டாந் திருமுறை தந்தருளிய சைவசமய குரவருக்கு வணக்கம்

சிற்றம் பலக் கோவைத்
தேன் சொரியும் செம்முகிலை
மற்றொப்பி லாத திரு
வாசகத்தின் வாரிதியைக்
கற்றைச் சடையான்
கருத்துருக்கும் காதலனை
கொற்றத் திருவாத
வூரனைக்கை கூப்புதுமே.

## திருவாதவூரரும் திருவாசகமும்

திருவாதவூரடிகள்
தென்னவன் பிரமராயன்
மாணிக்கவாசகர்
அருள்வாசகர்
மணிவாசகம்
மதுரவாசகம்
வாசகமாலை
வாசகத்தேன்

## வைரம்

பெண்களின் நேசநண்பன், பெண்களின் அழகுக்கு அழகு செய்யும் அழகன், இரத்தினங்களுள் விலையுயர்ந்தவன், வைரமானவன், தன்னாலன்றி வேறெதாலும் வெட்டப் படாதவன். வைரக்கல் வியாபாரம் பெரியவர்களிடம் வளர்கிறது. பெரிய நகரங்களை ஆளுகிறது. லண்டன், அன்ற்வேப், ஆம்ஸ்ரடாம் முதலிய நகரங்களில் தரப்படுத்துவோர், வெட்டுவோர், ஒளியூட்டுவோர், விற்பனையாளர் முதலானோர் பலர்வேலை வாய்ப்புப்பெற்றுள்ளனர்.


## யோகாசனம்

நல்ல பசிஉண்டாவதற்கு, முதுகு நிமிர்வதற்கு, கழுத்து வலுவடைவதற்கு, நடுவயிறு அழுத்தமாவதற்கு, நல்லமுறையில் உணவு சமிப்பதற்கு, ஒழுங்காக மலம் வெளியேறுவதற்கு, முதுசெலும்பின் மேற்பாகம் உறுதியாவதற்கு எங்கும் போகவேண்டாம், எந்த மருந்தும் வேண்டாம், ஒரே ஒரு வழி, செலவில்லாதவழி, அது தான் புஜங்காசனம் செய்தல். புஜங்காசனம் என்பது பாம்பின் நிலையாகும்.

அது எப்படி என்றால்?



நிலை 1



நிலை 2

குப்புறப்படுத்துக் கால்களை நேராக நீட்டுக. உள்ளங் கைகளை மார்பை ஒட்டி ஊன்றுக. தலை, கழுத்து, முதுகு இவற்றைப் படிப்படியாக மெதுவாக உயர்த்துக. பின் புறமாக வளைந்து அண்ணார்ந்து பார்க்க. அடிவயிறு தரையில் அழுத்திக்கொண்டிருக்கச் செய்க. இவ்வாறு சில நிமிடங்கள் இருந்தபின், படிப்படியாகப் பழையநிலைக்கு வருக. மூன்று நான்கு முறை இதனைச் செய்து பழகி ஆறு முறை செய்தால் போதும்.

## மில்க்வைற் தொழிலகத்தின் உள்வீட்டுத் திருமணம்

மில்க்வைற் தொழிலதிபரின் உடன்பிறந்த அண்ணன், உயர்திரு. கந்தையா இரத்தினகோபால் அவர்களின் மைந்தர்களுள் ஒருவரும், தொழிலகத்தில் உத்தியோகம் வகிப்பவருமான செல்வன் சிவகோபால் அவர்களுக்கும், கொக்குவில் சிவசுப்பிரமணியம் சிவபாக்கியம் தம்பதிகளின் செல்வியாய கௌரி அவர்களுக்கும் திருமணம் இனிது நிறைவேறியது. தம்பதிகள் எல்லாப்பேறுகளும் பெற்று இனிது வாழ்க.

**Milk White products are successful choice everywhere.**

★ எல்லாரிடத்தும் ஒழுங்காகப் பேசுதல் வேண்டும் ★

நீள நினைக்கவேண்டியவர்கள்:

## முத்துசாமி ஐயங்கார், இராகவையங்கார்

செந்தமிழ்ச் சிங்கங்கள் என்று பெயர் பெற்ற இராகவையங்கார் பெயர் படைத்த பெரியார்களுள் மற்றவர். ரா. ராகவையங்கார். மு. இராகவையங்கார் 1878. 7. 26இல் தோன்றி இளமையிலே விற்பத்திமானாய் 1901இல் மதுரைத்தமிழ்ச்சங்கக் கல்லூரியில் விரிவுரையாளராயிருந்த வித்துவான் இவர். இராமநாதபுரத்து அரசர்களறியச் செந்தமிழ் வளர்த்த இவர் யாழ்ப்பாணப் புலவர்கள் மீது பெருமதிப்புக் கொண்ட வித்தகர். வித்தையை மதித்த விவேகியாதலால் இவர் யாழ்ப்பாணத்தாரின் பங்களிப்புக்களை மறைக்கவில்லை, இருட்டடிப்புச் செய்யவும் இல்லை. (வேறு ஒரு ஐயரவர்கள் நாவலர் அவர்களையும், தாமோதரம்பிள்ளை அவர்களையும் சபாபதிநாவலர் அவர்களையும் மறைத்து இருட்டடிப்புச் செய்தவர். அவர் நாவலர் வழியில் வந்த பண்டிதமணியிடம் வாங்கிக் கட்டியவர். டாக்டர் பட்டம் கௌரவமான முறையில் பெற்ற ஐயரவர்களின் இருதயமும் டாக் (இருண்டது, நஞ்சுள்ளது என்றும் கண்டித்துப் பாடியவர் பண்டிதமணி.) மு. ரா அவர்கள் மதுரைத்தமிழ்ச் சங்கத்துச் செந்தமிழ் ஏட்டின் பத்திராதிபராயிருந்த காலத்தில், குமாரசாமிப்புலவர், கணேசஐயர், விபுலானந்தர் முதலான எங்கள் நாட்டுப் பெரியவர்கள் சிந்தனைக் கட்டுரைகள் எழுதிச் சிறப்புப் பெற்றனர். விபுலானந்தர் சுவாமியாவதற்கு முன்னரே, விஞ்ஞானக்கட்டுரைகள், கிரேக்க நாட்டுக் கோட்பாடுகள், சேக்ஸ்பியர் நாடக மொழி பெயர்ப்புக்கள் தீட்டிய பொற்காலம் அது.

மு.ரா. அவர்களின் வேளிர் வரலாற்றுக் கட்டுரையைப் படிக்கக் கேட்ட தலைவர் மல்லாகம் வி. கனகசபைப்பிள்ளை அவரைப் பெரிதும் பாராட்டியதைத் தமிழ் நாட்டார் பெரும் பேருகக்கருதி மதித்தனர். மு. ரா அவர்களின் நுண்மான் நுழைபுலக்கட்டுரைகள் பெரும் தொகுதியாக வெளிவந்துள்ளன. இப்பெரியார் 1960 ஆம் ஆண்டுவரை வாழ்ந்தமை தமிழ்த்தொண்டு செய்வதற்காகவேயாம்.

## சைவப்பெரியார் மறைவு

இற்றைக்கு ஐம்பது ஆண்டுகளுக்கு முன் பரமேஸ்வராக்கல்லூரியில் இன்ரர்சயன்ஸ் வகுப்பிற் படித்த உரும்பராய் வாசி திரு மு. பசுபதி அவர்கள், தினமும் நீராடித் தோய்த்துலர்ந்த ஆடைதரித்து முக்குறியாகத் திருநீறு பூசிச் சந்தனமிட்டு உருத்திராக்கமணிந்து வந்தவர். அவர் அரசாங்க சேவையில் கணக்காளராய் இருந்த காலத்திலும் சைவக்கோலம் சிதையாமல் வாழ்ந்தவர். ஓய்வு பெற்ற பின்னர் தமது தவ வாழ்வை மேலும் முடுக்கி வாழ்ந்தவர். அவர் சிவபெருமானின் குஞ்சிதபாத நிழலில் ஆனந்த முறுவர் என்பது திண்ணம்.



## நவீன உலக அன்னை

வடபாரதத்தில் வங்காளப்பிரிவில் ஜெயராம் பட்டணம் தந்த மாதரசி உலக அன்னை எனப்பெருமையும் புனிதமும் கொண்ட சாரதாதேவி அவர்கள். அவர் மிக்க இளம் பராயத்தில் பகவான் இராமகிருஷ்ணரின் பாலிய பாரியாராகிப் பெரிய பக்தையாகி அன்னையானவர். கன்னியாகவே ஆச்சிரமவேலைகளையும் கோயில்வேலைகளையும், குருசீடமுறையில் கருத்துடன் செய்து, மாணாக்கர் பலரை உருவாக்கிய மேதையானவர். படிப்பறிவில்லாமல் அவருக்குச் சாத்திரங்கள் யாவும் கரைந்தபாடமாயின. நவீனவிஞ்ஞானம் கொலைக்கருவிகளைச் செய்ததையும், கடிகாரம் மனித உழைப்பைக் கட்டுப்படுத்தி அடிமையாக்கியதையும் அவர் விரும்பவில்லை. எளிமை, தூய்மை கடமை, உழைப்பு, வழிபாடு, ஒழுக்கம், கட்டுப்பாடு என்பன அவரின் போதனைகள்.

நாடகவித்தகர், கலையரசு, நவாலியூர்

## க. சொர்ணலிங்கம் அவர்கள்

நகைச்சுவைநடிகர், நல்லதமிழறிஞர் நீண்டகாலம் வாழ்ந்தவர், பண்பாளர். அவரின் நூற்றாண்டுவிழாவை எதிர்வரும் 1989- 3- 30ஆம் நாளில் கோலாகலமாகக் கொண்டாடவேண்டும்.

சென்ற நூற்றாண்டில் நாவலர் அவர்களுக்குப் பக்கத்துணையாயிருந்த கனகசபை என்னும் லோட்டன் கலைஞரின் மைந்தர் சொர்ணலிங்கம். இளமையில் சீனியர் வகுப்பிற் சித்தி பெற்றபின், வர்த்தக நிறுவனமாய வாக்கர் கொம்பனியில் வேலைபார்த்தபின், அரசாங்கசேவையில் ஈடுபட்டுக் கலைவளர்ச்சியில் கருத்துக் கொண்டவரானார். பிறரைப்போல குரலெடுக்கவும், மிருகங்கள் போலச் சத்தமிடவும் வல்லவராயிருந்தார். இவர் இற்றைக்கு அறுபதாண்டுகளுக்கு முன் 1926இல் இலங்கை வானொலியில் ''சோறு பச்சடி துவரம்பருப்படி'' என்னும் பாட்டைப்பாடி எல்லோரையும் மகிழவைத்தார்.

(தொடர்ச்சி 8ஆம் பக்கம்)

No Washing is complete without
MILK WHITE BLUE SOAP

★ கெட்டிக்காரனாயினும் கர்வம் ஆகாது ★

## பெரியண்ணர் சுந்தரம்பிள்ளை

பெரிசுந்தரம் எனப்பெயர்பெற்ற இலங்கை மலையகத்துத்தலைவர், 1931ஆம் ஆண்டில் முதல் அரசாங்கசபையிலேயே மந்திரியாராகத் தெரியப்பெற்று தம்மாலான பணிகளைச் செய்தவர். பின்னர் இலங்கை இந்தியத்தமிழரின் வாக்குரிமை தவிடு பொடியானதால் தெரியப்பெற்ற தலைவராகும் பாக்கியமிழந்த பெரியண்ணன் சுந்தரம் பிள்ளை சிலகாலம் மூதவை உறுப்பினராயும் இருந்தவர். பொறுப்பு வாய்ந்த முதல் தமிழ் மந்திரியாராயிருந்த பெருமை பெற்றவர் அவர். அவரை நீளநினைக்கலாம். அவர் தங்களுக்கு இடைஞ்சலாய் இருந்தார் என்ற காரணத்தாலேதான் தென்னிலங்கையர் 1936 ஆம் ஆண்டில் சர்வசிங்களமந்திரிகள் சபையினைத் தெரிந்தனர். ஆட்சிமுறையும் ஒருபக்கஞ் சாய்ந்தது.

## மேரி கியூறி அம்மையார்

போலந்து நாட்டைப் பிறப்பிடமாகக் கொண்ட மேறிஸ்க்ளோடோவிஸ்கா மேற்படிப்புக்காக பாரிஸ்நகரஞ்சென்று, நவநாகரிக வாழ்வைக் கண்ணுற் பாராது, மலிவான இருப்பிடத்தில் சீனிதானும் போடாத வெறும் தேனீருந்தியும் வாழ்ந்து படித்துவந்த காலத்தில் மயங்கி விழுந்தபோது தூக்கி உதவி புரியவந்த கியூறி என்னும் பெரியாரை அண்டிப்படித்து பெரும் பட்டம் பெற்று, றேடியம் கண்ட வித்தகியாகி, நோபல்பரிசு பெற்று, கணவனின் மறைவின் பின் தானே பாரிசில் பௌதிகப் பேராசிரியையாகி விஞ்ஞானம் வளர்த்த பெரியவள். அவரின் மகளும் அவர் வழிப் பெரியவளான செய்தி பெண்களுக்கு அரியதொருவழிகாட்டி. தமக்கையார் வாழவேண்டுமென்று கருதி, விவேகியாய தான் பெரியவர்கள் வீட்டில் பணிப்பெண்ணுயிருந்து பெற்ற வருமானத்தைக் கொண்டு முதலில் அக்காவைப் படிக்கவைத்து, பின் தன் படிப்பை எளிய உணவுடன் மேற்கொண்ட விற்பத்தியை என் சொல்வது. பவுடர், கிறீம், வாசனை, பொக்கற்மணி எல்லாம் அவள் கண்ணுலும் காணுதவள். வறுமையில் செம்மை!

## வேதநாயகம்பிள்ளை

மயூரம் வேதநாயகம்பிள்ளை எனவழங்கிய தமிழ்ப் பெரியார் திருச்சிராப்பள்ளியின் களத்தூரில் தோன்றியவர். இவர் 1824முதல் 1887வரையிலான காலத்தவர். திரிசிரபுரம் மீனுட்சிசுந்தரம்பிள்ளை அவர்களிடம் முறையாகக் கற்றுப் பலவிதபாவினங்கள், கீர்த்தனைகள் பாடப் பழகியதோடு நல்ல வசனநடையும் பழகியிருந்தவர். எதுகை, மோனை, ஓசைநயமுள்ள பாடல்களும், நகைச்சுவைததும்பும் வசனமும் எழுதிப் புகழ்பெற்றவர். ஒரு பிரதேசத்தில் முனிசிப் என்னும் வேலை பார்த்தவாறே இவர் செய்த தமிழ்த்தொண்டு சீரியது கூரியது. பெண் புத்திமாலை, நீதிநூல், சர்வசமரச கீர்த்தனை, பிரதாப முதலியார் சரித்திரம், சுகுணசுந்தரி சரித்திரம் முதலிய நூல்கள் செய்தவர். பிரதாப முதலியார் என்பவர் கற்பனையில் எழுந்தவர். அவரின் மைந்தர் பரமமுட்டாள். கோழி கூவினுற்ருல் பொழுது விடியும் எனக் கருதிய அவன், பொழுது விடியாதிருக்கப் பள்ளிக்கூடம் போகாதிருப்ப வழிகாணக்கருதிச் சேவலைப் பிடித்து கடகத்தால் மூடி அடைத்தவன். அவனுக்குப் பாடஞ்சொன்ன உபாத்தியாயர் அவனைத் தண்டிப்பதற்குப் பதிலாக அவன் காண அடிவாங்குவதற்குச் சம்பளத்துக்கு ஒருவனை நியமித்தார். இதுபோன்ற நகைச்சுவைகள் இன்னும் பல கொண்டதே பிரதாப முதலியார் சரித்திரம். இந்நூலை விமர்சனம் செய்து 1942இல் படிப்பித்த பண்டிதமணி அவர்களின் வாசகங்களைக் கேட்ட செவிகளே செவிகள்.

## வில்லியம் வில்பபோஸ்

ஆங்கிலேயருள் ஒரு அதிமனிதன், பெருமனிதன். அவர் 1759முதல் 1833வரை வாழ்ந்தவர். நன்குகப் படித்தவர், நாடாளுமன்றப்பிரதிநிதியாயிருந்தவர். மனிதாபிமானம் மிக்கவர். ஆண்டான் அடிமை என்னும் வர்க்கவேறுபாடு மனிதத்தன்மையில்லாதது என்று கண்டு, அடிமை வியாபாரத்தை அறவே நீக்குவதற்குக் கங்கணம் கட்டியவர். பொதுமக்கள் சபையினர் அவர் வழிநின்றபோதிலும், பிரபுக்கள் சபையினர் மூன்முண்டுகள் முட்டுக்கட்டை போட்டதையும் தட்டிவிழத்தித் தம் பக்கம் சேர்த்துச்சட்டஞ் செய்த சான்றோன் அவர். மேற்கு இந்தியா அடிமைகளின் தளையறுப்பதற்குப் பாராளுமன்றம் இரண்டு கோடி பவுண அங்கீகரித்த மூன்றும்நாள் மனப்பூரிப்பில் இருதயம் நிற்க உயிர்துறந்த உத்தமன் அவர். நடைமுறைக் கிறிஸ்தவசமயம் என்னும் நூல் எழுதிய அந்தமகான், பெருங்கொடையாளி. அவருடைய கொடை ஒலி உலகம் எங்கும் கேட்டது.

## சிவானந்தர் பாலர் பாடசாலை



நல்லூர் திவ்விய ஜீவன சங்க மண்டபத்தில் நடைபெறும் சிவானந்தர் பாலர் பாடசாலையை இடையிடை பார்வையிடும் மில்க்வைற் தொழிலதிபர்

★ கெட்டவர் சிநேகத்தை விட்டுவிடு ★

## மறைமலை அடிகள்
### (1876 — 1950)

சுவாமி வேதாசலம் எனவும் வழங்கிய இவர் நாக பட்டினத்தைச் சேர்ந்தவர். பல்லாவரத்தில் வாழ்ந்தவர். சோமசுந்தரநாயக்கர் என்னும் பெரியாரிடம் படித்தவர். சென்னை கிறிஸ்தவக்கல்லூரியில் விரிவுரையாளராய் இருந்தவர். ஆராய்ச்சி நூல்கள் பலவாக எழுதியவர், கட்டுரைகள் இறுக்கமான தனித்தமிழ் நடையில் எழுதியவர், உளநூல்கள், ஞானநூல்கள், யோகநூல்கள், எழுதியவர். கோவை, காஞ்சி பாடியவர். நாடகங்கள் எழுதியவர். திருவாசகத்து முதல் நான்கு அகவல்களுக்கும் அகலவுரை செய்தவர். தென்னிந்திய சைவசித்தாந்தக் கழகத்தையும் அதன் திங்கள் வெளியீடாய செந்தமிழ்ச் செல்வியையும் வளர்த்தவர். சிலகாலம் தலைக்கு மேல் முக்காடு போர்த்து உடை அணிந்தவர்.


ஒருமுறை முக்காடு போட்ட வண்ணம் யாழ்ப்பாணம் வந்து யோகசுவாமிகளிடம் போனார்கள். "எடடி முக்காட்டை" என்று யோகசுவாமிகள் புன்சிரிப்புடன் சத்தமிட்டதும் போர்வையை எடுத்தார். தாங்கள் என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள். சுவாமி நான் திருவாசகத்துக்கு உரை எழுதுகிறேன். நல்லது திருவாசகம் பாடியவர் யாவர்? மாணிக்கவாசகசுவாமிகள். அப்படியானால் எழுதிப்போட்டீர்கள் என்று கூறியவாறு யோக சுவாமிகள் எழுந்து போனார். பின்தொடர்ந்த அடிகளார் "திருவாசகம் பாடியது யார் சுவாமி?" என்று கேட்ட வண்ணம் போனார். "சிவபெருமான்" என்பது உங்களுக்குத் தெரியாதோ? என்று விடையிறுத்தார் எங்கள் சுவாமிகள்.

## தேசிகவிநாயகம்பிள்ளை

"பாட்டுக் கொருபுலவன் பாரதியடா – அவன்
பாட்டைப் பண்ணோடொருவன் பாடினானடா
கேட்டுக் கிறுகிறுத்துப் போனேனேயடா – அந்தக்
கிறுக்கில் உளறுமொழி பொறுப்பாயடா .

இவ்வாறு பாடி, பாரதியாரை உயர்த்திய உண்மைக் கவிஞர், மக்கள்கவிஞர் தேசிகவிநாயகம்பிள்ளை, நாஞ்சில் நாட்டில் சிவதாணுப்பிள்ளை ஆதிலட்சுமி தம்பதிகளுக்கு மகவாக 1876-7-14ஆம் நாள் தோன்றினார். இவரின் தந்தையாரும், பாட்டனாரும் புலவர்களாயிருந்தமையால், பிறப்புரிமை நெறியாள்கையினால் இவருக்குப் புலமை பீறிட்டுக்கொண்டு வந்து குற்றேவல் செய்தது, இவர் பாடிக் குவித்தார், மலரும் மாலையும் ஒரு பெருந்தொகுதி, ஆசியசோதி ஒருபகுதி, கீர்த்தனங்கள் உரைகள் இன்னும் பல. பிள்ளை அவர்கள் சாந்தலிங்கத்தம்பிரான் என்பவரிடம் பெரிய நூல்களைக் கற்று பெருமைபெற்று நல்லாசிரியரானார். திருவாங்கூர்மகளிர் ஆசிரியர்ப் பயிற்சிக் கலாசாலையில் பேராசிரியராகப் பணிபுரிந்து முப்பத்தாறாண்டுச் சேவையில் மூப்படைந்து ஓய்வுபெற்றார். சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கத்தார் அவருக்குக் கவிமணிப் பட்டம் வழங்கினர். பின்னர் பெரிய செட்டிமார் பாராட்டும் பொன்னாடையும் பொன் முடிப்பும் வழங்கினர். அவர் ஆதீனங்களிற் பெற்ற சிறப்புக்களும் அருமையானவை. அவர் 1954-9-26 ஆம் நாள் வரை வாழ்ந்தார்.

## ஜோர்ஜ் பேர்னட் ஷோ



G.B.S. என்னும் மூன்றெழுத்துப் பேர்வளி நகைச் சுவை எழுத்தாளர், புலவர், நாடகாசிரியர். விவேக பூர்வமாக உரையாடவல்ல அவர் உடனுக்குடன் சூடான பதிலிறுக்கும் வாயாடியுமாவர். தான் பெரியவன் எனத் துணிவுடன் கூறிய அவர் உண்மையில் பெரியவரேதான். பிரித்தானியாவின் பகுதியாய அயர்லாந்தின் தலைநகரான டப்ளின் நகரில் 1856 இல் தோன்றி 1950 வரை வாழ்ந்தவர். நாவலாசிரியராய், விமர்சனமெழுதுபவராய், படங்கள், இசையமைப்புக்கள். நாடகங்கள் என்பனபற்றி எழுதிப் பெரும் கண்டனப்புலியெனப் பெயரெடுத்தவர். நூல்களால் லட்சாதிபதியாயவர். சீர்திருத்தவாதியாய்ச் சமூகப்புனரமைப்புக்கு நகைச்சுவைததும்ப நன்றாகப் பேசிப்புகழ் பெற்றவர். விவேகங்குறைந்த அழகுராணி ஒருத்தி அவரிடம் சென்று, "ஐயா! நீங்கள் என்னை மணந்தால் உங்கள் விவேகமும் என் அழகும் சேர்ந்த பிள்ளைகள் பிறக்கும்" என்று கேட்டாள். உடனே அவர் "அம்மணி என்னுடைய அவலட்சணமும் உன்னுடைய மந்தபுத்தியும் சேர்ந்த பிள்ளைகள் பிறந்தால் என்ன செய்வாய்?" என்று கேட்டார்.

## சைவ முன்னேற்றச் சங்கத்தின் செயற்கரிய நற்பணிகள்

கொழும்பில் கொம்பனித் தெருவைச் சேர்ந்த சைவ முன்னேற்றச்சங்கத்தார், அருள்மிகு சிவசுப்பிரமணிய சுவாமி கோயிலை மையமாகக்கொண்டு செய்துவருகின்ற பணிகள் பாராட்டற்பாலன. இக்காலத்தில் நிகழும் கெடுபிடிகளின் மத்தியில் சிவத்தை நம்பிவாழ்பவர்கள் தங்கள் தொண்டினைத் தொடர்ந்து செய்கிறார்கள், லண்டனிலும் செய்விக்கிறார்கள். நாயன்மார் குருபூசைகள் தவறாமல் நடைபெறுகின்ற அமைவில், இடையிடை கூட்டுப் பிரார்த்தனைகளும் கொழும்பு நகரை வாழ்விக்கின்றன. இத்தகைய தொண்டர்களை நாம் தொழுது கும்பிடுகிறோம், பாராட்டுகிறோம். வாழ்த்துகின்றோம். வாழ்க வெல்க.

★ கஷ்ட காலத்திலும் மன உறுதி வேண்டும் ★

# பொறுப்பு வாய்ந்தவர் போய்விட்டார்

இலங்கை அரசின் வெவ்வேறு அரசாங்கங்களின் அமைப்பில் பொறுப்புவாய்ந்த இரண்டு திணைக்களங்களில் பொறுப்புவாய்ந்த பணிகளாற்றிய தமிழர் போய் விட்டார்.

ஒருசமயம் நாட்டை ஆண்ட பிரதம மந்திரியாருக்கு ஒரு கலக்கநிலையில், திணைக்களத்தின் உயர் உத்தியோகத்தர் சொல்லை நம்புவதா, அல்லது பொலிஸ் சேவையாளரின் பென்னம் பெரிய தலைவர் சொல்லை நம்புவதா என்பதே அந்தநிலை. ஈற்றில் பிரதம மந்திரியார் உத்தியோகத்தர் சொல்லையே நம்பினார்.

சாதாரண கிளறிக்கல் சேவையில் சேர்ந்து கடின உழைப்பு, நம்பிக்கைக்குரிய போக்கு, நேர்மை நிதானம் தவறாத சேவை என்பவற்றால் படிப்படியாகப் பதவியுயர்ந்து பிரதமர் மதிக்குமளவில் கண்ணியமாயிருந்து ஓய்வு பெற்றார்.

சிறந்த தமிழனாய்ச் சைவசமயப்பெருஞ் செல்வனாய்த் தொண்டு செய்ய முற்பட்டுத் தேசமுய்ய எழுந்த செம்மையான சங்கங்களில் சேர்ந்து பல வழிகளாலும் பன்முகப் பணிகள்செய்ய முற்பட்டு முழுமூச்சாய்ப்பணி புரிந்தார்.

நாட்டின் தெற்குப்பக்க வாசிகளின் அசுரத்தனத்தால் இடம்பெயர்ந்த வடபுலத்தார், கிழக்குத்திசையார் மொத்துண்டு மோதுண்டு, அடிபட்டு, உதைபட்டு, உடைமைகளை பறிகொடுத்து உடுத்த உடையோடு உயிரைத் தாங்கிய வண்ணம் அகதிகளாய் வெளியேறி அம்மாடி என்று தாய்மண்ணில் தஞ்சம் புகுந்த வேளையில் தானும் அவர்களோடு அல்லற்பட்டழுத அநுபவத்தால், அவர்களுக்கு ஆறுதல்கூறி, அகதிகள் முகாங்கள் எங்கும் சென்று அவர்களுக்கு உதவிசெய்யப் பெரியவர்களை அணைத்துப் புன்சிரிப்போடு அவர்களைத் தூண்டிப்பணி செய்ய வைத்த தொண்டர்க்குத் தொண்டன் அவர்.

ஊர்களறிய, நாடறிய, உலகமறிய உறுதுணைபுரிந்த உத்தமனாய அவருக்குப் பெற்றோரிட்ட பெயரே உலகந் தழுவிய விசுவலிங்கம் எனில் பெயரிலமைந்த தத்துவ விளக்கம் தானென்னே.

கோயிற் பரிபாலனம், பாடசாலைப் பரிபாலனம், சமூகநிலைய பரிபாலனம், அனாதர்கள் நிலையப் பரிபாலனம், அகதிகள் நிலையப் பரிபாலனம், தர்ம பரிபாலனம், என்றித்திறத்த பரிபாலனங்கள் எல்லாவற்றையும் நடைமுறைப்படுத்திய நெறியாளர் அவர்.

அகதிகளுக்குதவும் பெருமன்றத்தின் அன்புக்கரமாய், கொடுக்கும் கரமாய்த் தாய்மைக்குணம் நிரம்பிய தயாளனாய்க் காலை முதல் மாலை வரை ஓய்வெடுக்காமல், ஒவ்வொருவரையும் வாருங்கள் என்று வரவேற்றுத் தேனீர் கொடுத்து, உங்கள் வேதனை தீரும் ஆவன செய்வோம் என ஆறுதல் கூறி, அகில உலகமும் – விசுவமும் அளித்த உதவித் தொகையை அளவறிந்து பங்கிட்டுக் கொடுத்த செங்கரம் அவர் கரம்.

இருபது வயது நிரம்பாத இளம்பெண் சோகமே உருவாகித்துவண்டு நடந்து தோளில் குழந்தையொன்றைத் தாங்கியவாறு வந்து முன்னின்று சிந்திய கண்ணீரைக்கண்டு தானும் கண்ணீர் சிந்தி, அவுணவெள்ளம் அவளுடைய கணவனுயிரை அடித்துப் போனதை அறிந்து அம்மா உனக்கு ஆவன அனுப்புவோம் நீ போய் வா என்று உதடுகள் நடுங்கக் கூறினாரே.

சனிவாரம் வெளியாகும் சஞ்சிகையின் முகாமைச் சபைத்தலைவராய் இருந்து தென்னகத்துத் தக்க ஆங்கில எழுத்தாளரைக் கொண்டு அந்தச் செய்தித்தாளைத் திசையனைத்தும் தமிழர் துயர் அறியும் வகை செய்தாரே.

சைவவித்தியாவிருத்திச்சங்கம், நாவலர்சபை மருதடி வினாயகர் தர்மகர்த்தாசபை, தாவடி சனசமூகநிலையம், சுதுமலை சனசமூகநிலையம் இன்னும் பல நிலையங்கள் யாவும்

மாபெருந் தூண் சாய்ந்து விட்டதே
எங்களுக் கெல்லாம் பெருநஷ்ட மாயதே
அநுதாப அறிவிப்பு பிரிவுத்துயரை மாற்றுமோ
அவரை எளிதில் மறக்கவும்தான் முடியுமோ
பிரசைகள் குழுக்களுக்கு அவர் மீகாமன்
அவரின் தொண்டு ஈடுஇணை யற்றது
பூதவுடம்பு மறைந்தது புகழுடம்பு மறையாது
விசுவலிங்கம் அவர்களின் புகழ் வாழ்க.
ஆறுதல் பெறாது அழுகின் றனவே

விசுவலிங்கம் அவர்களிடம் அவருடன் பணிபுரிபவர்கள் எல்லோரும் கண்ட பெருமை!– அவர் மனிதப்பண்பாடு நிரம்பியவர். மற்றவர் மனநிலையை உடனடியாக உய்த்துணர வல்லவர், இரக்க சுபாவம் உள்ளவர். அவர் இடத்தை நிரப்புவது மிகக்கடினம்.

## குளம் தோண்டுவதை மறந்துவிடாதீர்

குளங்கள் வற்றிப் பொருக்கு எழுந்துள்ளன. குளப் பொருக்கு நல்லபசளை. அவற்றை எடுப்பதால் இரட்டைப் பரிசு கிடைக்கின்றன. பசளை விளைவைப் பெருக்கும் வேளையில், குளத்தில் அதிக மழைநீர் தேங்கி நின்று சுற்றாடலை வளம் படுத்துகிறது. சிரமப்படாதீர் நாங்கள் மண்வெட்டிகள், மண்சுமக்கும் தாச்சிகள் இரவலாகத் தந்துதவுவோம். சிரமதானம் மேலான தானம். அது சமூகப்பணி. உங்கள் சமூகத்துக்கு உங்கள் உயிர்ப்பான உபகரிப்பு. பங்களிப்பு: — மில்க்வைற்.

(5ஆம் பக்கத் தொடர்ச்சி)

## நாடக வித்தகர், கலையரசு

அவர் பல நாடகங்களைத் தயாரித்து மேடையேற்றித் தாமும் நடித்த வேளைகளிற் பெண்வேடங்களும் தாங்கிக் கனிந்த குரலில் பேசியுமிருக்கிறார். சிலவேளைகளில் அவர் ஒருவரே மூன்று பாத்திரங்களை நடித்துக்காட்டியதும் உண்டு. கூனி, பரதன் முதலிய பாத்திரநடிப்புக்கள் அவருக்குக் கைவந்தவை. அவர் ஆங்கிலநாடகத்தில் ஷைலொக் என்னும் யூதனாயும் நடித்துள்ளார். அவர் தமிழ்நாடறிந்த நாடகமேதை.



# நால்வர் பொற்றுள் நம்முயிர்த் துணை

தேவாரமும் திருவாசகமும் தந்த நால்வர் சைவத்தை உய்யும் வகை செய்து, தமிழ் வளர்த்த சான்றோர், சமய குரவர். அவர்கள் நால்வரையும் தினமும் வணங்கவேண்டியது எங்கள் கடமை.

யாழ்ப்பாணம் இந்துமகளிர் கல்லூரியில் அண்மையில் நடைபெற்ற விநாயகர் ஆலய கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து, கல்லூரி மண்டபத்தில் எழுந்தருளச் செய்யப்பெற்ற நால்வர் திருவுருவங்களின் வர்ணப் படங்களின் சாந்நித்யம் பிள்ளைகளை வெகுவாகக் கவர்ந்தது. ஏறக்குறைய 1800 மாணாக்கியர் பத்மாசனத்தில் வெண்டாமரை மலர்களென முகமலர்ச்சியோடு மணிக்கணக்காகப் பார்த்துப் பரவசப்பட்டு மகிழ்ந்திருந்த படங்கள் இவை. இவற்றை எழுந்தருளச் செய்த அதிபர் செல்வி இராமநாதன் அவர்களின் நிலையான பங்களிப்புக்களில் இதுவும் ஒன்று.

## நோயணுகா நெறி

நோய்கள் அணுகாமல் நாம் நமது உடம்பைப் பாதுகாத்துக்கொள்ளுதல் தலைசிறந்த செல்வம். அது எப்படியென்று கேட்கிறீர்கள். வெகு சுலபமாக இலவசமாக அதனைச் செய்துகொள்ளலாம். வேப்பந்தளிர் பச்சை நிறம் அடைவதன்முன் ஒருவகைப் பவளநிறமாயிருக்கும் போது கொய்து கொஞ்சம் ஓமமும் உப்பும் அளவாக இட்டுப் பொடியாக்கிப் பத்திரப்படுத்தி வைத்திருந்து காலை மாலை சிறிதளவு உட்கொண்டு பாருங்கள்.

## சைவச்சடங்கு

சைவச் சடங்குகள், சம்ஸ்காரங்களுள் திருமணச் சடங்கு என்பதும் ஒன்று. "சடங்குவீட்டுக்குப் போய் வாறேன்" என்று நாடோடியாக மக்கள் கூறுவது வழக்கம்.

சைவச் சடங்கில் மூன்று சாட்சிகள் இடம்பெற்றன. அக்கினி சாட்சியாக, தேவப்பிராமணர் சாட்சியாக, சபையோர் சாட்சியாக என்று குருக்களே முறையாகச் சொல்லிப் பாணிக்கிரகணம் என்னும் கைப்பிடித்தல் நடைபெற்றது. இங்ஙனம் நடைபெற்ற திருமணத்தில் விவாகரத்து நிகழவில்லை.

முற்றொடர்:

# எம்நாட்டவர் இப்படிச் சொன்னார்கள்

21 தொழிலில் உயர்வு தாழ்வு காட்டுதலாகாது
22 ஒருவர் தொழில் மற்றவரையும் வாழ்விக்கவேண்டும்
23 எல்லாத் தொழில்களும் நாட்டுக்கு வேண்டும்
24 உடம்பில் வெறுக்கத்தக்க உறுப்பு எதுவும் இல்லை
25 தொழில்பற்றி எவரையும் அவமதித்தலாகாது
26 அறிவும் ஊக்கமும் உழைப்பை வளம்படுத்துவன
27 அறிவுத்திறன் பெற்றவர் செருக்கு அடைதலாகாது
28 பழிக்கு அஞ்சுபவர் பண்புடையவராவர்
29 பெறுவதை இட்டு இன்பம் அடைதல் வேண்டும்
30 வேலை செய்யுமுன் திட்டமிடுதல் அவசியமாகும்
31 செய்யும் தொழிலில் பெருமைகொள்ளல்வேண்டும்
32 எம்மால் உலகம் மகிழ்ச்சி அடைதல்வேண்டும்
33 வருவாய்க்குத் தக்க செலவுகளை வகுத்தல்வேண்டும்
34 சமூகத்துக்குத் தனிமனிதனின் கடமையும் உண்டு
35 நம் குடும்பத்துக்கு நாமே உத்தரவாதம் உள்ளவர்
36 எந்தநாடும் தனிமனிதனிடமிருந்து எதிர்பார்க்கிறது
37 தான் நுகர்வதைவிடக் கொடுப்பது அதிகமாதல் அறம்
38 உலகுக்கு ஒன்றும் கொடாதவனே பெரிய சோம்பேறி
39 ஒருவித பங்களிப்பும் செய்யாதவனே. சமூகக் கடனாளி
40 உண்ணிப்பூச்சி, குருவிச்சை என்பன சமூகக்கடனாளிகள்




## விபுலானந்தம் பயிலுவோம்

ஆங்கிலத்துக் கவிதை பலப் பல
அருமை யாகத் தமிழ்செய்து தந்தனன்
நாங்கள் மொண்டு பருகி மகிழவும்,
நன்று நன்றென உண்டு புகழவும்
தீங்க னிச்சுவை கொண்டவை தாமுமே
தீட்டினுன் தெய்வ யாழினை ஆய்ந்ததால்
ஓங்கி னுனின் உயர்வைப் பருகுவோம்
உண்மை யோடவன் நூலும் பயிலுவோம்

— மஹாகவி

★ மாதாவின் சொல்லை மறத்தலாகாது ★



அண்மையில் நாச்சிமார் கோயில் முகப்பில் அமைந்த அழகுத் திருக்கோபுரத்தின் படம். இதன் கும்பாபிடேக வைபவம் சென்ற மாதச் செய்தியில் வந்துள்ளது.

## தேனிலூறிய நெல்லிக்காய்

மலேசியாவில் வாழும் சின்னப்பு என்னும் சைவப் பெரியார் தமது அளவெட்டியூரில் நூற்றுக்கணக்கானோருக்கு ஆண்டுதோறும் அரிசி, புடைவை, பணம் ஆகிய மூவகைத்தானமும் முறையாக கொடுக்கும் கரத்தினர். அவருக்கு அண்மையில் உண்டான ஒருவகை விறைப்பு நோய்- ஆதறைற்றிஸ் வகையினைச் சேர்ந்தது. அதற்கு மேற்குநாட்டு மருந்துகள் பயன்தராவென்றும் தேனிலூறிய நெல்லிக்காயை நாற்பது நாட்கள் உட்கொள்ளுமாறு ஞானியார் ஒருவர் கூறியுள்ளார்.

## வீட்டு வளவுதோறும் நெல்லி வளர்க்க

வடமராட்சியில் வரணியைச் சேர்ந்த இயற்றாலை ஊரைச் சேர்ந்த முருகேசு என்னும் பெரியார் நெல்லிக் கன்றுகள் முளைக்க வைத்து, பொலிதீன் பைகளில் பெயர்த்து வளரவிட்டு, மில்க்வைற் தொழிலதிபர் கனகராசா அவர்களிடம் சேர்த்துள்ளார். இவை எல்லோருக்கும் இலவசமாக வழங்கப்பெறும்.

## சண்டிலிப்பாயில் சைவ சமய விருத்தி

சண்டிலிப்பாய் சைவமுன்னேற்றச்சங்கமும், இரட்டையப்புலம் வைரவர் ஆலய பரிபாலன சபையாரும் இணைந்து நடத்திய திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் குருபூசை திரு. ம. பொ. செல்வரத்தினம் அவர்கள் தலைமையில் நடைபெற்றபோது அருட்கவி விநாசித்தம்பி அவர்கள் அரிய சொற்பொழிவினை ஆற்றினார்.

## நான் யார் தெரியுமோ?

இது சாதாரணமாக அதிகாரம், பதவி, பணம், செல்வாக்கு உள்ளவர் மற்றவரை அடக்கி ஆள்வதற்கு அதட்டிக்கேட்டு வெருட்டும் வினா. பென்னம் பெரிய மந்திரி, அதுவும் அமாத்திய குலத்து வந்தவர், பிரமராயர் என்னும் பெருங் கௌரவத்துக்குரியவர், திருவாதவூரர் என்னும் மாணிக்கவாசகசுவாமிகள், கைகூப்பி இறைவனைப்பாடி நான் யார் என்று தாழ்மையாகக் கேட்கின்றார். வசிட்டமுனிவர் வழியில்வந்த பராசரர் மைந்தன் வியாசரின் புதல்வன் சுகர். மிதிலையில் இல்லறஞானியாய ஜனகரைக்காணப் போனார். வாசல்காப்போரிடம் ''மகான் சுகப்பிரம்ம மகரிஷி வந்துள்ளார் என்று சொல்' என்றார். அது கேட்ட ஜனகர் ''நல்லது முனிவருடன் கூடிவந்தவர்களை விட்டுத்தனியே வரச்சொல்'' என்றார் நான் யார் தெரியுமோ என்ற மிடுக்குகள் எல்லாவற்றையும் விட்ட பெரிய முனிவர், ''சுகன் வந்துள்ளான்'' என்று சொல் என்று கூறினார். ''சரி' வரச்சொல் என்றார் ஜனகர். சுகர் பெரியவராகித் திரும்பினார். நான் செத்தவாறு தேய்வதை நான் கெட்டவா பாடி தெள்ளேணம் கொட்டமோ என்று மாணிக்கவாசகசுவாமிகள் அருளியுள்ளார்.

## விவசாயப் பழமொழிகள்

1. அகல உழுவதைவிட ஆழ உழு
2. அடர விதைத்தால் போர் உயரும்
3. அந்து அரித்த நெல் முளையாது
4. அறிவிலே விளையாதது எருவிலே விளையும்
5. அறுகு முளைத்தவயல் அதோகதி
6. அன்னம் ஒடுங்கினால் ஐந்தும் ஒடுங்கும்
7. ஆடி அவரை தேடிப் போடு
8. ஆடி அவரை கார்த்திகைக்குக் காய்
9. ஆடி வாழை தேடி நடு
10. ஆடி விதை தேடி விதை
11. ஆடு ஊடாடக் காடும் விளையாது
12. ஆட்டெரு அவனுக்கு மாட்டெரு மகனுக்கு
13. ஆவணிப்பட்டம் அழகுப்பட்டம்
14. ஆவிரை இலையும் ஆபத்துக்கு உதவும்
15. ஆழஉழுதல் ஆட்டெருவிலும் அதிகம்
16. ஆழவுழுதாலும் அடுத்தடுத்து உழு
17. ஆழஉழு அடர விதை
18. ஆற்றுமண்ணுக்கு வேற்றுமண் உரம்
19. இளைத்தவன் எள்ளு, வலுத்தவன் வாழை
20. இறைப்புக்கெல்லாம் ஒரே விளைவு
21. இனக் கூட்டானாலும் நிலக் கூட்டாகாது
22. ஈயுந்தனையும் எருவிடு காயுந்தனையும் களைஎடு
23. ஈரநிலத்தில் ஏரைப்பிடி
24. ஈரூரில் உழுதவன் இரண்டும் கெட்டான்
25. ஈரூர் வேளாண்மை இருதாரத்துக்கு நேர்

## ஒரு திருத்தம்

முந்திய செய்தியில் எருவிலிருந்து உயிர்வாயு என்னும் பயோகாஸ் பெறலாம் என வரவேண்டிய கருத்து மின்சாரம் பெறலாம் எனத் தவறாகவந்ததைத் தயவு செய்து திருத்திப் படித்து எம்மை மன்னிக்கவும்.

★ கிடைக்காத பொருளை மறந்துவிடல் நன்று ★

## அறிந்து கொள்ளுங்கள்

1. பாட்டுடன் இராக்காவல் புரிபவர்
2. பதினறு பிரசாத கலைகள்
3. ஒவ்வொரு வருடத்துக்குமுரிய தானியாதிபதி
4. உடுத்த சட்டையோடு நீராடுதல்
5. உயிர்ப்பிக்கும் உயர்ந்த ..லிகை
6. நார் மிகுந்த தேங்காய் இனம்
7. வழிப்போக்கர்களுக்கு அளிக்கப்படும் உணவு
8. சிவபெருமான் இராவணனுக்குக் கொடுத்த வாள்.
9. ஏற்றமில்லாத நடுத்தரமான நல்ல விலை.
10. பயிரிடும்போது இரண்டாம்முறை உழுதல்.

1. சங்கீதப்பாரி 2. சசிகலை 3. சசியாதிபதி 4. சலேலஸ்நானம் 5. சஞ்சீவி 6. சடைத்தேங்காய் 7. சதாவிருத்தி 8. சந்திரகாசம் 9. சமவிலை 10. சம்படித்தல்.

## ஆன்ம ஒளி! அருட்சுடர்

தவத்தில் உயர்ந்தவர்
தருமத்தில் தழைத்தவர்
கருமத்தை முடிப்பவர்
கரைகாணு அருளினர்
சனதனம் காப்பவர்
சமயத்தின் விளக்கு
நான்மறை வேந்து
நல்லவை அருள்பவர்
தூய தொண்டினர்
துயரம் துடைப்பவர்
அன்பு மழை
அணையா விளக்கு
அண்டினர்க்கு ஆதரவு
அருள்பொழியும் முகில்
அவர்தான் அகிலம் போற்றும்
காஞ்சிப் பெரியார்.

## திருமண எழுத்து

பதிவுகாரன் திருமணங்களைக் கச்சேரி இடாப்பில் எழுதத் தொடங்கிய நாள் 19-10-1847 ஆகும். திருமண எழுத்து வந்த பின்னரே எழுத்தைத் தள்ளும் விவாகரத்து நிலவத் தொடங்கியது.

## பிள்ளைப்பதிவு

இன்று பிறப்புக்கொப்பி என்று ஓடித்திரிகிறார்கள். பிறப்புக்கொப்பி எப்ப வந்தது? பிள்ளைப்பதிவு எப்ப வந்தது? பிறப்புப் பதிவும் இறப்புப் பதிவும் 1868ஆம் ஆண்டிலேதான் வந்தன. எனவே அதற்கு முன் பிறந்தவர்களுக்குப் பிறப்புக்கொப்பி கிடையாது. சாதக கருமம் சம்ஸ்காரங்களில் ஒன்று. அது புத்திரன், புத்திரி பூமியில் ஜனனமான சுபவேளை கிரகநிலை, பலன் இவைகளை விபரமாகக் கூறுவது. பிறப்புப் பதிவு பிழையாக உள்ளன. ஐந்து வயது பிந்தியும் பதிந்துள்ளார்கள். சாதகம் பிழைக்காது. தவறாது.



## எமர்சன்

ஆற்றல்மாத்திரம் எழுத்தாளனை உருவாக்குவதில்லை. நூலின் பின்னணியில் ஒருவர் இருத்தல்வேண்டும்.

வீரர்கள் ..வரும் இறுதியில் அலுப்புத்தட்டுவார்கள்;

செல்வங்களுள் தலைசிறந்தது ஆரோக்கியம்.

உண்மையாக இறுதியாக நின்று நிலவுவது சமாதானமேயன்றி யுத்தமல்ல.

நிலத்தையுடையவனை நிலம் தன் உடைமையாக்கி விடுகிறது.

அறியாமையிலிருந்தே அச்சம் பிறக்கிறது.

இனிப்பில் புளிப்பும் தீமையில் நன்மையும் உண்டு.

முயற்சியில்லாமல் பெரிய சாதனை உண்டாவதில்லை.

முற்றொடர்:

## பிற நாட்டவர் இப்படியும் சொன்னார்கள்

81 அம்மணமானவனை எவரும் உரியவியலாது
82 கடலிலே நீரைத் தேடமுடியாது
83 காலையில் சிரிக்காதவன் நண்பகலில் சிரிக்கான்
84 பெரிய காரியத்தில் தவறினும் பெருமை தரும்
85 எல்லாம் செலவானபின் மிச்சம் பிடித்தல் இயலாது
86 நல்ல போட்டி ஒரு வரப்பிரசாதம்
87 இடையன் பிரபுவானாலும் ஆட்டின் சிணியை விரும்புவான்.
88 இயமனோடு வாதாடி வெல்லமுடியாது
89 கேடு செய்ய நினைப்பதே பெரிய பாபமாகும்
90 யுத்தத்தில் அழிபவர் அநேகர் நன்மை பெறுவோர் சிலர்.
91 தினமும் வரும் விருந்தாளி அடுப்படிக் கள்ளன்
92 புத்தகங்களையும் பெண்களையும் நித்தம் கவனித்தல் வேண்டும்
93 கடன் பெறுதல் பிச்சைகேட்பதிலும் பெரிதல்ல
94 புகழ் பெறவேண்டியது, மானம் காக்கவேண்டியது.
95 உறுதியுள்ளவன் உலகையே வசமாக்குவான்
96 துன்பப்படுவோருக்கு நம்பிக்கை இரண்டாம் உயிர்
97 பிழைகளைப் பெரிதாக்குவது பொறாமை
98 தவளையின்றி நீருண்டு, நீரின்றித் தவளையில்லை
99 உண்மையும் த..தியும் இறுதியில் வெல்லும்
100 விரல்கள் அசையாமல் ஊதும் குழல் இசைதராது.

★ செலவைக் குறைத்து செல்வத்தைச் சேமிக்க ★

## மூளைத்தளர்ச்சி, களைப்பு

மூளைவேலைசெய்பவர்கள் நன்ருகப் பழங்கள் சாப்பிடவேண்டும். மேற்குநாடுகளில் பெயர்பெற்ற அப்பிள், பேரீந்து, திராட்சை, தோடை எங்கள் நாட்டிலும் கிடைக்குந்தானே. இவற்றில் ஏனைய பழங்களில் போஸ்பரஸ் உண்டு.

## 1986 யூலை மாத நிகழ்ச்சிகள்

(ஆனி 17 — ஆடி 15)

| | | | |
|---|---|---|---|
| 2. | புதன் | — | ஏகாதசி விரதம் |
| 3. | வியாழன் | — | கார்த்திகை விரதம் |
| 4. | வெள்ளி | — | பிரதோச விரதம்<br>திருநெல்வேலி முத்துமாரி கொடி.<br>மேரி கியூரி நினைவு |
| 6. | ஞாயிறு | — | அமாவாசை விரதம்<br>ஓட்டுசுட்டான் கொடி |
| 7. | திங்கள் | — | கதிர்காமம் கொடி |
| 10. | வியாழன் | — | நீர்வேலி வாய்க்கால்தரவை<br>பிள்ளையார் கொடி |
| 11. | வெள்ளி | — | மாணிக்கவாசக சுவாமிகள்<br>குருபூசை, சிவானந்தர் தினம் |
| 12. | சனி | — | மாவிட்டபுரம் கொடி<br>இரவு நடேசர் அபிஷேகம் |
| 13. | ஞாயிறு | — | உதயம் நடேசர் உத்தர தரிசனம்<br>தம்பலகாமம் கொடி |
| 14. | திங்கள் | — | பகல் 10-50 மேல் அட்டமி<br>கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை<br>தினம்<br>பிரான்சியர் தேசிய தினம் |
| 15. | செவ்வாய் | — | அட்டமி - நவமி<br>மறைமலையடிகள் தினம் |
| 16. | புதன் | — | நவமி பகல் 7-07 வரை<br>தட்சிணயன புண்ணியகாலம் |
| 17. | வியாழன் | — | ஆடிப்பிறப்பு, ஏகாதசி விரதம்<br>சீனிவாச சாஸ்திரியார் தினம் |
| 19. | சனி | — | சனிப்பிரதோஷம்<br>விபுலானந்தர் தினம் |
| 20. | ஞாயிறு | — | சாரதா தேவியார் தினம் |
| 21. | திங்கள் | — | பூரணை விரதம்<br>வேதநாயகம்பிள்ளை தினம் |
| 23. | புதன் | — | முன்னேஸ்வரம் கொடி<br>பெரியண்ணன் சுந்தரம்பிள்ளை<br>தினம் |
| 25. | வெள்ளி | — | கலட்டி அம்மன் கொ்டி |
| 26. | சனி | — | கலையரசு சொர்ணலிங்கம் நினைவு<br>பேணுட்ஷோ பிறந்தநாள் |
| 28. | திங்கள் | — | பகல் 12-14 மேல் அட்டமி |
| 29. | செவ்வாய் | — | அட்டமி - நவமி<br>வில்பபோஸ் தினம். |
| 30. | புதன் | — | நவமி பகல் 2-50 வரை<br>கார்த்திகை விரதம் |
| 31. | வியாழன் | — | திலகர் நினைவு |


# மில்க்வைற் நீலசோப்

சம்பூரண சலவைக்கு
மில்க்வைற் நீலசோப்பை வாங்கி
உபயோகியுங்கள்.

உங்கள் அபிமானத்திற்குரிய

மில்க்வைற் நீலசோப்




தற்பொழுது கூடிய நிறையுடன்
நவீனமுறையில் மெருகூட்டப்பட்டு
எங்கும் விற்பனையாகின்றது.

**விலை ரூபா 2/- மட்டுமே.**

நுரைவளம் கூடிய
மில்க்வைற் நீலசோப்பை வாங்கிப்பாவித்து
அதன் மேலுறைகளில் அச்சிட்டிருக்கும்
10 திருக்குறள்களைக் கத்தரித்து அனுப்பி
1 மில்க்வைற் செய்தி
அல்லது 100 திருக்குறள்களை அனுப்பி
1 அழகிய கைலேஞ்சி
இனமாகப் பெற்றுக்கொள்ளுங்கள்.

**மில்க்வைற் தொழிலகம் யாழ்ப்பாணம்**

த. பெ. இல. 77 - தொலைபேசி: 23233


யாழ்ப்பாணம் சாந்தி அச்சகத்தில் அச்சிட்டவர் திரு. தி. நாகரத்தினம். யாழ்ப்பாணம் மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகத்தின் சார்பாக வெளியிட்டவர் "சிவநெறிப் புரவலர்" க. கனகராசா ஜே. பி. அவர்கள்
கௌரவ ஆசிரியர் திரு. க. சி. குலரத்தினம் 1-7-86.